07.02.2026

அ.வ.எண். 192/2017

பி.சா.1 – திரு.மனோஜ்குமார், த/பெ.சின்னக்குட்டி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 07.02.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்து பார்த்துள்ளேன். என்னுடைய தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். 23 முழம் X 24 முழம் அளவுள்ள சந்துக்கு மேல்புறமாக எனது வீடு உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எதிர் வழக்குரை தாக்கல் செய்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் சின்னகுட்டியும், மருதக்குட்டியின் தகப்பனார் அய்யாக்கவுண்டர் அவர்களது காலத்தில், நட்பாக சண்டை, சச்சரவுகள் இன்றி வாழ்ந்து வந்தனர் என்றால் தெரியாது.

2. அய்யாக்கவுண்டருக்கும், என் தகப்பனார் சின்னகுட்டிக்கும், இடையே பிரச்சனை இருந்ததாக என் தகப்பனார் சொல்லவில்லை என்றால் தெரியாது. மேற்படி 23 முழம் X 24 முழம் அளவுள்ள சந்து சம்மந்தமாக என்னுடைய தகப்பனாரும், அய்யாகவுண்டரும் 1980 ம் ஆண்டில் ஒரு சமரச ஒப்பந்தம் எழுதி கொண்டனர் என்றால் தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டு மேற்படி சந்தினுடைய தென்புறத்தில் மாடிப்படிக்கட்டுக்களுடன் கூடிய கட்டமைப்பை உருவாக்கினேன் என்றால் இல்லை. நான் அவ்வாறு உருவாக்கினேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. மருதக்குட்டி கவுண்டரின் மேல்புற சுவர் பழைய காலத்து மண் சுவர் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, அதனை சுண்ணாம்பு பூசுவதற்கு பராமரிப்பதற்கும், நான் அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 23 முழம் X 24 முழம் அளவுள்ள சந்து வாதிக்கு சொந்தமானது என்றும், அதை நான்

தொடர்ந்து இடையூறு செய்து வருகிறேன் என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினையில் வாதியின் சொத்திற்கு மேல்புறத்தில் உள்ள சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பாகப்பிரிவினை ஆவணத்திற்கு முந்தைய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் சொத்திற்கு மேல்புறத்தில் உள்ள என்னுடைய சொத்தின் விஸ்தீரணம் 3959 சதுரடி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அளவுகளை உறுதி செய்ய நில அளவையர் மூலம் அளவை செய்து, அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. பாகப்பிரிவினை ஆவணத்தில், மேற்படி அளவுகளை உறுதி செய்வதற்கு நில அளவையரின் வரைபடம் எதுவும் இணைத்து பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் தாக்கல் செய்த, ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்திற்கு வாதி தான் உரிமையாளர்கள் என்றும், நான் வேண்டுமென்றே அவர்களுக்கு இடையூறு செய்வதோடு இந்த வழக்கினை எதிர் வழக்காடி வருகிறேன் என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 4 ல், வாதிகளின் தகப்பனாரான அய்யாக்கவுண்டருக்கு, 10.07.1957 நாளிட்டு 1054/1957 எண்ணிட்ட ஆவணம் மூலமாக உரிமையை நிரூபணம் செய்துள்ளார்கள் என்பதை நான் மறுத்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

5. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 5 ல், 23 முழம் X 24 முழம் அளவுள்ள சொத்தின் சுவாதீனம் வாதியின் வசம் தான் உள்ளது என்றும், அதை நான் மறுத்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 6 மற்றும் 7 ல், நான் சொல்லியுள்ள சங்கதிகள் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் பத்தி 8 ல், வாதிகள் உரிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொல்வது தவறானது என்றும், வாதிகள் உரிய ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

6. பிரமாண வாக்குமூலம் பத்தி 9 ல், சொன்னவாறு நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பிரச்சனைக்குரிய சந்து எனக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளரா என்றால் மேப்பில் உள்ளது, அறிக்கையில் இல்லை. வாதி தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றி நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளாரா என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூலம் பத்தி 10 மற்றும் 11 ல், நீதிமன்ற கட்டணம், வழக்கு மூலம் தவறானது என சொல்வது தவறு என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில், என்னுடைய சொத்து குறித்த நாற்புற எல்லையில், அய்யாக்கவுண்டர் வீட்டிற்கும் மேற்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. வழக்கில் வாதி கோரிய பரிகாரம் சட்டப்படியும், சங்கதிகள் படியும், ஆவணங்கள் படியும் சரியானது என்றும், தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனாரும், மருதக்குட்டி கவுண்டரின் தகப்பனாரும், செய்து கொண்ட ஆவணங்கள் பற்றி வேண்டுமென்றே நான் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur